2021 பிப்ரவரி 27]
சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

முற்பகல் 10–55

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை முதற்கண் வணங்குகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, நாள்தோறும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற, பள்ளி, கல்லூரி மாணவர்கள் மனதிலும், தமிழக மக்கள் மனதிலும் நீங்கா இடம் பிடித்திருக்கிற நம்முடைய குடிமராமத்து நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களை முதற்கண் வணங்குகின்றேன். கட்சிக்கும், ஆட்சிக்கும் உற்ற துணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். எங்களுடைய விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், பால் வளத் துறை அமைச்சருமான மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அண்ணன் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று, இதே அவையில் அமைச்சர்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசுக் கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு உற்ற துணையாக இருந்த, எங்கள் மாவட்டச் செயலாளர், மாண்புமிகு

பால் வளத் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், அத்திகுளம்–செங்குளம் ஊராட்சியில் நீண்ட ஆண்டுக்காலமாக கால்நடை மருந்தகம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47. மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

47—

ஆரம்ப சுகாதார நிலையம்

***51333—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மை வாழவைத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு

2021 பிப்ரவரி 27]

தமிழ்நாடு முதலமைச்சராக பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு சாதனைகளைச் செய்து, "இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்று, ஊர் வியக்க, பார் வியக்க ஆட்சி செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எங்களைப் போன்ற எளியவர்களையும், இன்னும் சொல்லப்போனால், 2013-ல் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்க வைத்து, இதுநாள்வரையில், இதே துறையில் பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையில், பல்வேறு பணிகளைச் செய்ய ஆசியும், அருளாசியும் வழங்கிக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல், கண்ணை இமை காப்பதுபோல் எங்களைக் காத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு காலக்கட்டங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த நல்லாட்சியில், அம்மா கொடுத்த நல்லாட்சியில், தாங்கள் பேரவைத் தலைவராக இரண்டு முறை தொடர்ந்து இருந்து, பத்தாண்டுக் காலம் பேரவைத் தலைவராக இருந்து, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை தங்களது அனுபவத்தாலும், ஆற்றலாலும், இந்த மாமன்றத்தில் படைத்திருக்கிறீர்கள். அந்த வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி, புரட்சித் தலைவர் அவர்களின் அன்பைப் பெற்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே அன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"என்ன கொடுப்பார்; ஏது கொடுப்பார்
என்றிவர்கள் எண்ணுமுன்னே,
பொன்னும் கொடுப்பார்; பொருளும் கொடுப்பார்;
போதாது, போதாதென்றால்,
இன்னும் கொடுப்பார்; இவையும் போதாதென்றால்,
அள்ளி, அள்ளிக் கொடுப்பார்"

அவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அப்படி அள்ளி, அள்ளிக் கொடுக்கக்கூடிய வகையிலே, பொதுவாக சிலபேர்

அவதாரம் எடுப்பார்கள். அவதாரம் என்று சொன்னால், ஓர் அவதாரம் எடுப்பார்கள்; இல்லையென்றால் மறு அவதாரம் எடுப்பார்கள்; இல்லையென்றால் மறு அவதாரத்திற்குப் பின்னாலே மறுபடியும் அவதாரம் எடுப்பார்கள். இப்படி, ஒருமுறை, இருமுறை, மறுமுறை அவதாரம் எடுப்பார்கள். ஆனால், பல அவதாரங்கள் எடுத்த அவதாரப் புருஷராக ஒருவர் இந்த நாட்டிலே இருக்கிறார் என்று சொன்னால், அவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி என்று நீங்கள் கேட்க வேண்டும்? அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுத்து, ஒரு ஏழை அரசுப் பள்ளி மாணவனாக அவதாரம் எடுத்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை ஒரே நேரத்தில் பெற்றுக்கொடுத்து, ஒரு மருத்துவக் கல்லூரி மாணவராக, மருத்துவராக அவதாரம் எடுத்த அவதாரப் புருஷர், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஏன், நேற்றுகூட 9, 10, 11 ஆம் வகுப்பு மாணவர்கள் எல்லாம் All pass என உடனடியாக அறிவித்துவிட்டு, தேர்வு முடிவை எதிர்பார்த்து ஏக்கத்துடன் இருக்கக்கூடிய மாணவராக அவதாரம் எடுத்த, அவதாரப் புருஷர், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: ஏன்; எல்லோரும் ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், ரூ.12,110.74 கோடியை அள்ளிக் கொடுத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வாங்கிய விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்து, டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, காவேரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்தைக் கொடுத்து ஒரு ஏழை விவசாயியாக, கடன் பெற்ற ஒரு விவசாயி, மனதில் மகிழ்ச்சிகொள்ளக்கூடிய ஒரு விவசாயியாக, ஏழை விவசாயத் தொழிலாளியாக அவதாரம் எடுத்த அவதாரப் புருஷர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். ஏன், மகளிர் சுய உதவிக் குழுவினர் கூட்டுறவு

2021 பிப்ரவரி 27]

வங்கிகளில் பெற்ற கடன்களை, யாரும் எதிர்பார்த்திராத நிலையில், அத்தனைக் கடன்களையும் ஒரே அறிவிப்பிலே தள்ளுபடி செய்து, ஒரு மகளிர் குழுத் தலைவியாக, ஒரு மகளிர் குழு பிரதிநிதியாக, மகளிர் குழு உறுப்பினராக அவதாரம் எடுத்த அவதாரப் புருஷர், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். காவேரி குடிதண்ணீர் கொடுத்து, தாகத்தோடு இருக்கக்கூடிய, ஏக்கத்தோடு இருக்கக்கூடிய ஒரு சாதாரண குடிமகனாக அவதாரம் எடுத்த அவதாரப் புருஷர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். இப்படி பல்வேறு அவதாரங்கள்; (குறுக்கீடு) இன்னும் சொல்லப்போனால், கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன்கள்வரை அடகு வைத்துப் பெற்ற நகைக் கடன்களைத் தள்ளுபடி செய்து இன்றைக்கு மூக்குத்தியையும், தோடையும் கூட்டுறவு வங்கியில் வைத்துக் கடன் பெறக்கூடிய சாதாரண ஏழை எளிய தாய்மாராக, அந்தத் தாய்மார்களின் வயிற்றில் மகிழ்ச்சி தரக்கூடிய, பால் வார்க்கக்கூடிய வகையில் அவதாரம் எடுத்த ஓர் அவதாரப் புருஷர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

அவர் முதன்முதலாக 5 அவதாரங்களை எடுத்தார்; இதனை எண்ணிப் பார்க்க வேண்டும். அதில் ஒரு முக்கியமான அவதாரம் பிரசவ வலியோடு இருக்கக்கூடிய ஒரு பெண் அவதாரம். தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு பவுனைக் கொடுத்து, மாங்கல்யம் ஏறப் போகிற அந்தப் பெண்ணாகவும் அவதாரம் எடுத்தார். அதற்குப் பின்னால் கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவத்திற்கென ரூ.12,000/– ஆக இருந்த உதவித் தொகையை ரூ.18,000/– ஆக உயர்த்தி, பிரசவ வலியோடு, சுகப் பிரசவம் ஆகக்கூடிய அந்தப் பெண்ணாகவும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவதாரம் எடுத்தார்கள். இப்படி எத்தனையோ அவதாரங்களை எடுத்த உழைப்பாளி, அனுபவசாலி, திறமைசாலி; எடுத்த விஷயத்தை, எடுத்த காரியத்தை யோசிக்காமல் உடனடியாகச் செய்யக்கூடிய அந்த அவதாரம், எடுத்த காரியத்தில் உறுதியாக, எந்த அசைவுகள் வந்தாலும் உறுதியாக, நடை குலைந்தாலும், நிலை குலையாத மாமனிதராக நிற்கக்கூடிய, அவதாரம் எடுக்கக்கூடிய அவதாரப் புருஷராக பல அவதாரங்களை எடுத்திருக்கின்றார்.

இவ்வளவு அவதாரங்களை எடுத்ததற்குப் பின்னால், கடைசியாக உலகெங்கும் கொரோனா நோய்த் தொற்று வந்தது. இந்தியாவிலும் வந்தது; தமிழ்நாட்டிலும் வந்தது. உலகில் வல்லரசு

நாடுகளில் உள்ள மக்கள் எல்லாம் உயிர் பயத்தில், அச்சத்தில் நடுநடுங்கிக்கொண்டிருந்த நேரத்தில் தன் உயிரைத் துச்சமென நினைத்துக் கொண்டு, அந்த நேரத்திலும் ஓர் அவதாரம் எடுத்தார். என்ன அவதாரம் என்றால் கொரோனா நோய்த் தொற்று பரவாமல் தடுக்கும் ஒரு முன்களப் பணியாளராக அவதாரம் எடுத்தார். அதுதான் முக்கியமான விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முதலமைச்சர், ஒரு முதலமைச்சராக தான் இருந்த அவதாரத்தை மாற்றிக்கொண்டார். அதாவது, களத்தில் நின்று பணியாற்றும் ஒரு முன்களப் பணியாளராக அவதாரம் எடுத்த ஒரே தலைவர், முதலமைச்சர், உலகத்திலேயே, இந்த நாட்டிலேயே நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ முதலமைச்சரைப் புகழ்வதற்காகவோ, போற்றுவதற்காகவோ இதனை நான் இங்கே பதிவு செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு வரலாறுகளை பெருமைமிகுந்த இந்தச் சட்டமன்றம் பெற்றிருக்கின்றது. இந்தப் பெருமைமிகுந்த மன்றத்தில் நீங்கள் எவ்வளவு இடர்பாடுகளைச் சந்தித்து, இந்தச் செங்கோலை நிலைநிறுத்தியிருக்கின்றீர்கள் என்பதை நாங்கள் எல்லாம் நன்கு அறிவோம். உங்களோடு நாங்கள் பல ஆண்டுக்காலம் பயணித்துக்கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு மாண்புமிகு மூத்த அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சோதனைகளைத் தாண்டி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு, அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு துணை நின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் மட்டுமல்ல; அதையும் தாண்டி நாங்கள் அனைவருமே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இப்படி பல்வேறு அவதாரங்களை எடுத்த அவதாரப் புருஷராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சருக்கு, எங்களுடைய அவதாரப் புருஷர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் எல்லாக் காலங்களிலும் துணை நின்று, இன்றைக்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள். ஆக, இரண்டு அவதாரப் புருஷர்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றார்கள். இந்த அவதாரங்கள் அடுத்த முறை எப்படி இருக்கும் என்று சொன்னால், இப்படி பல்வேறு அவதாரங்களை பல காலகட்டங்களில் எடுத்த

2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் 2021–ல் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக, தமிழகத்தினுடைய துணை முதலமைச்சராக மீண்டும் இரண்டு அவதாரங்கள் எடுக்க இருக்கின்றார்கள் என்ற நல்ல செய்தியை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று வினாக்கள் கேட்ட உறுப்பினர்களுக்கு அவை துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்ற பதிலை துறையின் அமைச்சர்கள் சொன்னார்கள்; அது உண்மைதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய புண்ணியத்தில், கருணைப் பார்வையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட ஆரம்ப சுகாதார நிலையம் குறித்த கேள்விக்குப் பதிலாக, முதலமைச்சருடைய அம்மா கிளினிக் அங்கே திறக்கப்பட்டிருக்கிறது என்ற அந்த நல்ல செய்தியை என்னுடைய பதிலாக அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இவ்வளவு நேரம் பேச வாய்ப்பைத் தந்ததற்கு மட்டும் நன்றி அல்ல; பல காலகட்டங்களில், பல வாய்ப்புகளை, பல நேரத்தில் எங்களுக்கெல்லாம் நீங்கள் மனம் குளிர அள்ளிக் கொடுத்திருக்கின்றீர்கள். அதற்கும் சேர்த்து என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். பவானிசாகர் தொகுதி, ஒரு மலைப் பகுதியாகும். அங்கே தாளவாடி மற்றும் சத்தியமங்கலம் வட்டங்களில் நீண்டகாலமாக இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமல் இருந்த நிலையில், தடையாணையைத் தளர்த்தி ஏழையெளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க சிறப்பு அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*

[2021 பிப்ரவரி 27

அவர்களுக்கும், அதேபோல், கீழ்பவானி வாய்க்கால் புனரமைப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி, மக்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவருக்கு உற்ற துணையாக இருந்து மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளைச் சிறந்த முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எனக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்குவதோடு, எனக்கு அறிவுரைகளையும் வழங்கி நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி.கே. அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதினைந்தாவது தமிழக சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தின் இறுதி நாளில் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதியில் கீழ்பவானி அணை கட்டும்போது, பவானிசாகரில் அரசு திட்டம் துவக்கப்பட்டு, இன்றுவரை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இப்பகுதியைச் சுற்றியுள்ள, 50–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில் உள்ள ஏழையெளிய மக்களின் நலன் கருதி, அவர்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் பவானிசாகர் அரசு மருந்தகத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தாளவாடி தனி வட்டமாக அறிவிக்கப்பட்டு, 5 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், தாளவாடியில் உள்ள மலைப் பகுதி மக்கள், பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டுமானால் 60 கிலோ மீட்டர் தூரமுள்ள சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, தாளவாடி மலைப் பகுதி மக்களின் நலன் கருதி, தாளவாடி அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக் கூடம் ஒன்றை அமைத்துத் தருமாறு